HTVM

# அரையாண்டுத் தேர்வு - 2024

**12** - ஆம் வகுப்பு

## வணிகவியல்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி – அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 20X1=20

1. மேலாண்மை என்பது ------ ன் செயல் ஆகும்.
அ. மேலாளர் ஆ. கீழ்ப்பணியாளர் இ. மேற்பார்வையாளர் ஈ. உயர்திகாரி

2. பின்வருவனவற்றுள் எது முக்கிய பணிகள் அல்ல ?
அ. முடிவெடுத்தல் ஆ. திட்டமிடுதல் இ. ஒழுங்கமைத்தல் ஈ. பணியமர்த்தல்

3. முதல் நிலைச் சந்தை ---- எனவும் அடைக்கப்படுகிறது
அ. இரண்டாம் நிலைச் சந்தை ஆ. பணச்சந்தை
இ. புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ. மறைமுக சந்தை

4. பணச்சந்தை வழங்குவது
அ. நடுத்தகால நிதிகள் ஆ. குறுகியகால நிதிகள் இ. நீண்டகால நிதிகள் ஈ. பங்குகள்

5. நாட்டில்----பங்கு சந்தைகள் உள்ளன.
அ. 21 ஆ.24 இ.20 ஈ. 25

6. திட்டமிடல் என்பது -----செயல்பாடு ஆகும்.
அ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ. பரவலான/ ஊடுருவலான
இ. ஆ மற்றும் ஆ இரண்டும் ஈ. மேலே உள்ள எதுவும் இல்லை

7. விளம்பரம் என்பது ஒரு ----- ஆட்சேர்ப்பு வளமாகும்
அ. அகவளங்கள் ஆ. புற வளங்கள் இ.முகவர் ஈ. புறத்திறனீட்டல்

8. பங்கு பரிவரத்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ. களச்சந்தை ஆ. உள்ளூர் சந்தை இ. பாதுகாப்பு சந்தை ஈ. தேசிய சந்தை

9. இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது
அ. போர்டல் ஆ. சிபியு இ. மோடம் ஈ. வெப்நராங்

10. பொருட்களின் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
அ. 1962 ஆ. 1972 இ. 1930 ஈ. 1985

11. ---- என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்
அநுகர்வோர் ஆ.மொத்த வியாபாரி இ. உற்பத்தியாளர் ஈ.சில்லறை வியாபாரி

12. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார் ?
அ. மாவட்ட நீதிபதி ஆ. உயர் நீதிமன்ற நீதிபதி
இ. உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ மேலே குறிப்பிட்ட ஏதுவும் இல்லை

13. ஜி.எஸ்.டி என்பது ----
அ. சரக்கு மற்றும் சமூக வரி ஆ. சரக்கு மற்றும் சேவை வரி
இ. சரக்கு மற்றும் விற்பனை வரி ஈ. சரக்கு மற்றும் ஊதிய வரி

14. பொதுத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைகள் துவங்க அனுமதிப்பது -----ஆகும்.
அ. தாராளமயமாக்கல் ஆ. தனியார்மயமாக்கல் இ. ஊலகமயமாக்கல் ஈ.பொது நிறுவனம்

15. சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது ?
அ. இருதரப்பினர் ஆ. சொத்துரிமை மாற்றம் இ. விலை ஈ. அனைத்தும்

16. எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது ?
அ.3 மாதங்கள் ஆ. 5 மாதங்கள் இ. 4 மாதங்கள் ஈ. 1 மாதங்கள்

17. தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைபடுத்த முடியாது ?
அ. இடர்தாங்கி ஆ. புதுமைபடைப்பவர் இ. ஊழியர் ஈ. அமைப்பாளர்

18. முந்தைய பங்குதாரர்களுக்கு பங்குகளின் விலையை குறைத்து அவர்களுக்கு சாதகமாக வழங்குவது---
அ. ஊக்கப்பங்குகள் ஆ. சாதாரணப் பங்குகள் இ. உரிமைப்பங்குகள் ஈ. முன்னுரிமைப்பங்குகள்.

19. நிறுமச் சட்டப்படி இயக்குநர்கள்----மூலம் நியமிக்கப்பட வேண்டும்
அ. மத்திய அரசு ஆ. நிறுமச் சட்ட வாரியம்
இ. நிறுமத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் ஈ இயக்குநர்கள் குழு

20. நிறுமத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில்-----க்கு பேச உரிமை இல்லை
அ. தணிக்கையாளர் ஆ. பங்குநர் இ. பகராள் ஈ. இயக்குநர்

## பகுதி ஆ

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி வினா எண் 30 கட்டாயம் விடையளிக்கவும். 7X2=14

21. மேலாண்மை கருவிகளைப் பட்டியலிடுக
22. செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக.
23. முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA) என்பது என்ன ?
24. கடன் சந்தை என்றால் என்ன ?
25. அரசுப் பத்திரங்கள் சந்தை என்றால் என்ன ?
26. மனித வள மேலாண்மை என்றால் என்ன ?
27. நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன ?
28. பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன ?
29. டிஜிட்டல் இந்தியாவை பற்றி குறிப்பு வரைக.
30. கூட்டம் என்றால் என்ன ?

## பகுதி –இ

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 கட்டாயம் விடையளி. 7X3=21

31. டெய்லரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை ?
32. நிதிச்சந்தையின் பொருள் தருக.
33. fUT+y இரசிதின் பொது இயல்புகள் யாவை ?
34. காளை மற்றும் கரடி – விளக்குக.
35. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன ?
36. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன ?
37. தனியிடைச்சந்தை பற்றி விளக்குக.
38. ஸ்டாட்டப் இந்தியா என்றால் என்ன ?
39. சிறப்பு தீர்மானம் என்றால் ஏன்ன ?
40. நிழல் இய்கதுநர் என்று யாரை அழைக்கிறோம் ?

## பகுதி – ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 7X5=35

41. அ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி ? *அல்லது*
    ஆ. பல வகையான நிறும கூட்டங்களை விளக்குக.
42. அ. மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. *அல்லது*
    ஆ. பங்குகளுக்கும் கடனீட்டுப்பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?
43. அ. பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி ? *அல்லது*
    ஆ. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி ?
44. அ. செபியின் பணிகளை விவரி ? *அல்லது*
    ஆ. காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக.
45. அ. மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குக. *அல்லது*
    ஆ. எல்.பி.ஜியின் சிறப்பு அம்சங்கள் விளக்குக.
46. அ. ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி ? *அல்லது*
    ஆ. நுகர்வோரின் கடமைகளை விளக்குக.
47. அ. பணிவழிப் பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? *அல்லது*
    ஆ. நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் ?